# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

<u>அ.வ எண்: 106/2011 வெங்கடேசன்(வாசா1) தேதி:29.10.2025</u>

<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

இந்தவழக்கில் தாக்கல்செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 2ம்தபசில் விவரங்களும் பிராது 2ம்தபசில் விவரங்களும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். ஆணையர் தாக்கல்செய்த வரைபடத்தில் கண்ட FCED பகுதிக்குள் காம்பவுண்டு சுவர் இருப்பதாக தெரியவருவதாக எனது நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது நிருபணவாக்குமூலத்தில் பிராது 2 வது தபசில் கிழமேல்வடபக்கம் 16 அடி என்பதற்கு பதிலாக FC 11 அடி எனவும் கிழமேல் தென்பக்கம் 11 அடி என்பதற்கு குறிப்பிடுவதற்கு பதிலாக ED 7 அடி என தவறுதலாக ஆணையர் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். இந்தவழக்கில் நீதிமன்றஆணையரை சாட்சியமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கபோகிறேனா என்றால் இல்லை. இந்தவழக்கில் நிலஅளவையரை சாட்சியமாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கபோகிறேனா என்றால் இல்லை. எனது நிருபணவாக்குமூலத்தில் 20 வது பாராவில் ஆணையர் வரைபடத்தில் பிராது 2ம்தபசலில் பேர்பாதி வடபக்கம் 3ம்தபசில் எனவும் பேர்பாதி தென்பக்கம் 4ம்தபசில் என குறிப்பிடப்படுவதற்கு பதிலாக ஆணையர் அறிக்கையிலும் வரைபடத்திலும் பிராது FC 3 வதுதபசில் எனவும் ED 4 வது தபசில் எனவும் தவறுதலாக குறிப்பிட்டுள்ளார் எனவும் மேலும் ஆணையர் அறிக்கையிலும் வரைபடத்திலும் FE பாயிண்ட் காம்பவுண்டு சுவர் 2 வது தபசில் அடங்கியது என குறிப்பிட தவறிவிட்டார் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது நிருபணவாக்குமூலத்தில் பாரா 10ல் 2ம் தபசிலில் காம்பவுண்டு சுவர் இருப்பது தெரியவரும் என்றும், பாரா 20ல் FE பாயிண்ட் காம்பவுண்டு சுவர் 2 வது தபசில் அடங்கியது என குறிப்பிட தவறிவிட்டார் என கூறியுள்ளநிலையில் எனது நிலைப்பாடு என்பது பிராது 2ம்தபசில் சொத்தில் காம்பவுண்டு சுவர் வருமா? என்றால் வரும். ஆணையர் தாக்கல்செய்த வரைபடத்தில் கண்ட BB1AY பகுதி எனக்கு பாத்தியப்பட்டது என

குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அளவையரின் வரைபடத்தில் பிளாட் ஏரியா என மஞ்சள் நிறவண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள பகுதிக்கு மேற்கே கிழமேல் வடதலை 5 அடி எனவும் கிழமேல் தென்தலை 5–1/4 அடி எனவும் அந்த பகுதி எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதுடன் தாக்கல்செய்துள்ள வரைபடத்தில் கண்டபடி BF 63 அடிக்கு மேற்கே 5 அடி உள்ளதாக நாங்கள் நாளது தேதிவரை பிராதை சீர்திருத்தம்செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கொண்டு எங்கள் வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்யவேண்டும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.